**UNIVERSITY OF PERADENIYA**

**CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION**

**ශාස්ත්‍රවේදී උපාධි (බාහිර - නව නිර්දේශය) පරීක්ෂණය 100 මට්ටම - 2020 [redacted]**

**கலைத்தேர்வுப் பரீட்சை (வெளிவாரி–புதிய பாடத்திட்டம்) 100 வது தேர்ச்சி மட்டம் – [redacted] 2020**

**Bachelor of Arts (External - OLD Syllabus) Examination 100 Level –[redacted] 2020**

**(ECG 1: Economics I)**

அறிவுறுத்தல்கள்:

1. ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஆகக்குறைந்தது இரு வினாக்களை தெரிவு செய்து எல்லாமாக ஐந்து (05) வினாக்களுக்கு விடைதருக.
2. இந்த வினாத்தாளில் வினாக்களின் மொத்த எண்ணிக்கை எட்டு (08).
3. ஒவ்வொரு வினாவுக்கும் ஒதுக்கப்பட்ட புள்ளிகள் அதற்கமைய குறிப்பிடப்பட்டுள்ளன.
4. வரைபுத்தாள்கள் வழங்கப்படும்: கணிப்பான்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.
5. ஒதுக்கப்பட்ட நேரம்: மூன்று மணித்தியாலங்கள் **(03).**
6. மொத்தப்புள்ளிகள்: 100

---

## பகுதி I

1\. i பயன் மற்றும் எல்லைப்பயன் என்ற பதங்களிலிருந்து விளங்குவது யாது? (What is meant by the terms of utility and marginal utility?) (5 marks)

ii குறைந்து செல் எல்லைப்பயன் விதியினைக்கூறுக. (5 marks)

iii ஒரு நுகர்வோன் X, Y பண்டங்களை நுகர்வதன்மூலம் பெற்ற X, Y பண்டங்களின் எல்லைப்பயன்கள் பின்வருமாறு தரப்படுகின்றன. அப்பண்டங்களின் விலைகள் முறையே $P_X$ =Rs 2 , $P_Y$ =Rs 3.

| units | $MU_x$ (utils) | $MU_y$ (utils) |
|---|---|---|
| 1 | 20 | 24 |
| 2 | 18 | 21 |
| 3 | 16 | 18 |
| 4 | 14 | 15 |
| 5 | 12 | 9 |
| 6 | 10 | 3 |

a. இப்பொருட்கள் மீது வெலவு செய்வதற்கு நுகர்வோன் Rs 24 வருமானத்தினை வைத்திருக்கின்றான் எனக்கருதுக. X, Y பண்டங்களின் சமநிலைத்தொகைகளை காண்க. (5 marks)

b. Y இற்கான X இனது எல்லைபதிலீட்டு வீதத்தினை($MRS_{XY}$ பெறுக. சமநிலையில் $MRS_{XY}$ இனது பெறுமதியினை கணிக்குக. (5 marks)

2. i வரிசை சார் பயன், எண்கணிய பயன் என்பவற்றை வேறுபடுத்துக. (4 marks)

ii சமபயன்வளையினை வரையறுத்து அவற்றின் உடமைகளை கூறுக. (4 marks)

iii சமபயன் வளையியினை பயன்படுத்தி நுகர்வோர் சமநிலையினை விளக்கி சமநிலைக்கான நிபந்தனைகளை கூறுக. (4 marks)

iv சமபயன்வளையி அணுகுமுறையினை பயன்படுத்தி ஒரு பொருளுக்கான கேள்வி வளையியை பெறுக. (4 marks)

v ஒரு விலை மாற்றத்தின் பதிலீட்டு விளைவு மற்றும் வருமான விளைவு என்பவற்றை வேறுபடுத்துக. (4 marks)

3. i உற்பத்திச்சார்பு என்பதனால் விளங்குவது யாது ? விளக்குக. (5 marks)

ii ஊழியத்தினது சராசரி உற்பத்தி மற்றும் ஊழியத்தினது எல்லை உற்பத்தி என்பவற்றுக்கிடையிலான தொடர்பினை விபரிக்குக. (5 marks)

iii குறைந்து செல்லும் விளைவு விதி மற்றும் அளவுத்திட்ட விளைவு விதி என்ற பதங்களை வேறுப்படுத்துக. (5 marks)

iv சராசரிச்செலவு மற்றும் எல்லைச்செலவு வளையிகளுக்கிடையிலான தொடர்பினை விபரிக்குக. (5 marks)

4. i ஒரு நிறைபோட்டிச்சந்தையின் அடிப்படை பண்புகளைக் கூறுக. (5 marks)

ii ஒரு நிறைபோட்டி நிறுவனத்தின் குறுங்கால சமநிலையினைக்காட்டுவதற்கு ஒரு வரைபடம் வரைக. (5 marks)

iii ஒரு தனியுரிமை நிறுவனத்திற்கு ஒரு உதாரணம் தருக. ஏன் அந்த நிறுவனம் ஒரு தனியுரிமை நிறுவனம் என நீர் கருதுகிறீர்? விபரிக்குக.

(5 marks)

iv தனியுரிமைச்சந்தையில் சமூக நலன் மற்றும் வளஒதுக்கீடு என்பவற்றை சுருக்கமாக விளக்குக.

(5 marks)

## பகுதி II

5. i சமநிலைலத் தேசியவருமானம் மட்டம் என்பதிலிருந்து நீர் விளங்குவது யாது? விளக்குக.

(4 marks)

ii ஒரு பொருளாதாரமானது பின்வரும் செயல்பாடுகளால் வகைப்படுத்தப்படுகிறது. (An economy is characterized by the following functions);

| | |
|---|---|
| நுகர்வு (Consumption) | $C = 60 + 0.8Y_d$ |
| செலவிடத்தக்க வருமானம் (Disposable income ) | $Y_d$=Y-T |
| முதலீடு (Investment ) | I=100 |
| அரச செலவு (Government expenditure) | G=100 |
| வரி (Tax ) | T=100 |
| ஏற்றுமதி (Exports) | X=50 |
| இறக்குமதி (Imports) | M=70 |

(a) சமநிலைத்தேசிய வருமான மட்டத்தினை காண்க (4 marks)

(b) சேமிப்புச்சார்பினைக்கண்டு அதனை ஒரு வரைபில வரைக. (4 marks)

(c) வரிப்பெருக்கியினைக்கணித்து அதனை விளக்குக. (3 marks)

(d) எல்லை நுகர்வு நாட்டம்(MPC) என்பதனை வரையறுக்குக. எல்லைநுகர்வு

நாட்டம் 0.7 ஆக குறையுமாயின் சமநிலைத்தேசியவருமானமட்டத்தில் அதன் தாக்கத்தினை காட்டுக. (5 marks)

6. i பணநிரம்பல் என்றால் என்ன? பணநிரம்பலை தீர்மானிக்கும் காரணிகள் யாவை? விளக்குக. (5 marks)
   ii உயர்வலுபணத்திற்கும் பணப்பெருக்கிக்கும் இடையிலான தொடர்பினை விளக்குக. (5 marks)
   iii பணக்கொள்கை என்றால் என்ன? பணக்கொள்கையின் நோக்கங்கள் யாவை? (5 marks)
   iv இறைபற்றாக்குறை என்பதிலிருந்து நீர் விளங்குவது யாது? விளக்குக. (5 Marks)

7. i பணவீக்கம் என்றால் என்ன? இலங்கையில் அது எவ்வாறு அளவிடப்படுகின்றது? (5 marks)
   ii செலவுத்துண்டல் பணவீக்கத்தினை தூண்டும் பிரதான காரணிகளை கூறுக. (5 marks)
   iii ஒரு பொருளாதாரத்தில் பணவீக்கமானது வருமானபரம்பலையும் நிலையான வருமானம் உழைப்பவர்களையும் எவ்வாறு பாதிக்கின்றது? விளக்குக. (5 marks)
   iv ஒரு பொருளாதாரத்தில் வேலையின்மையும் பணவீக்கமும் ஒன்றில் ஒன்று தங்கியுள்ளனவா?. விளக்குக. (5 marks)

8. பின்வருவனவற்றிற்கு சிறுகுறிப்புக்கள் எழுதுக.
   i பெயரளவிலான நாணயமாற்றுவீதமும் மெய் நாணயமாற்றுவீதமும்
   ii இறைக்கொள்கையும் பணக்கொள்கையும் (Fiscal policy and monetary policy)
   iii வர்த்தக சகடஓட்டத்தின் கட்டங்கள் (Phases of business cycles)
   iv பணப்பெருக்கி (Money multiplier)

(5 marks each)

දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය - පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය
தொடர் தொலைக் கல்வி நிலையம் - பேராதனைப் பல்கலைக்கழகம்
CENTRE FOR DISTANCE & CONTINUING EDUCATION – UNIVERSITY OF PERADENIYA

பொதுக் கலைமாணி (வெளிவாரி பழைய பாடத்திட்டம்) - 2020

## பொருளியல் II
## ECG 2 ஒப்பீட்டுப் பொருளாதார அபிவிருத்தி

இவ்வினாத்தாளில் எட்டு (08) வினாக்கள் தரப்பட்டுள்ளன.
எவையேனும் **ஐந்து** (05) வினாக்களுக்கு மட்டும் விடை தருக
ஓதுக்கப்பட்டுள்ள நேரம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

1. (i) 'மானிய முறை' என்ற பதத்தினால் நீர் விளங்கிக் கொள்வது யாது? (05 புள்ளிகள்)

   (ii) இங்கிலாந்தில் மானிய முறையின் வீழ்ச்சிக்கு வழிவகுத்த காரணிகளை நுணுக்கமாககப் பரிசீலனை செய்க. (15 புள்ளிகள்)

2. "பிரித்தானியாவின் பொருளாதார அபிவிருத்தியானது விவசாயம், கைத்தொழில் ஆகியவற்றுக்கிடையே அதிகளவிற்கு ஒத்திசைவான தொடர்பினைப் பிரதிநிதிப்படுத்துவதாக அமைந்து காணப்பட்டிருந்துள்ளது." இக்கூற்றினை அடிப்படையாகக் கொண்டு பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரித்தானியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு விவசாயம், கைத்தொழில் ஆகியவற்றின் சார்புரீதியான பங்களிப்புக்களை ஆராய்க. (20 புள்ளிகள்)

3. பத்தொன்பதாம் நூற்றாண்டில் பெரிய பிரித்தானியா, ஜேர்மனி ஆகிய நாடுகளின் பொருளாதார அபிவிருத்திச் செய்முறைகளுக்கிடையே காணப்பட்டிருந்த வேறுபாடுகளும், ஒத்த தன்மைகளும் யாவை? (20புள்ளிகள்)

4. (i) ஜேர்மனியில் உருவாகிய ஸொல்வரின் (Zollverein) ஐக்கியத்தின் பிரதான அம்சங்கள் யாவை? (05 புள்ளிகள்)

   (ii) பத்தொன்பதாம் நூற்றான்டில் உள்நாட்டு வர்த்தகத்தின் விரிவாக்கத்தின் மூலம் ஜேர்மனியின் பொருளாதார அபிவிருத்திக்கு, ஸொல்வரின் ஐக்கியம் மேற்கொண்ட பிரதான பங்களிப்புக்களை ஆராய்க. (15 புள்ளிகள்)

5. பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரான்சில் ஏற்பட்ட பிரதான குடித்தொகை மாற்றங்களை ஆராய்க. (20 புள்ளிகள்)

6. (i) சோவியத்து ரஷ்யாவில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பொருளாதாரக் கொள்கையின் (NEP) பிரதான அம்சங்களைக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

   (ii) சோவியத்து ரஷ்யாவின் பொருளாதார அபிவிருத்தியில் புதிய பொருளாதாரக் கொள்கை ஏற்படுத்திய தாக்கங்களை மதிப்பிடுக. (15 புள்ளிகள்)

7. "சோவியத்தின் கூட்டுப் பண்ணை முறையானது சோவியத்து ரஷ்யாவின் விவசாயத் துறையின் அபிவிருத்திக்கு தீங்கினை ஏற்படுத்தும் ஒன்றாகவே அமைந்தது." இக்கூற்றினை நீர் ஏற்பீரா? உமது விடைக்கு காரணங்கள் தருக. (20 புள்ளிகள்)

8. பின்வருவனவற்றுள் எவையேனும் நான்கினைப் பற்றிச் சிறு குறிப்புக்கள் எழுதுக:- .

(i) 'புதிய மாதிரியிலான தொழிற் சங்கங்கள்'

(ii) 'தலையிடாக்' (laissez-fair) கொள்கை

(iii) 1760 – 1830 காலப்பகுதியில் பிரித்தானியாவின் பருத்தி நெசவுக் கைத்தொழில்

(iv) நோபோர்க் (Norfolk) முறை

(v) ஆவணர் இயக்கம் (Chartist movement)

(05 x 04=20 புள்ளிகள் )

---

දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය - පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය
தொடர் தொலைக் கல்வி நிலையம் - பேராதனைப் பல்கலைக்கழகம்
CENTRE FOR DISTANCE & CONTINUING EDUCATION – UNIVERSITY OF PERADENIYA

**பொதுக்கலை மாணி (வெளிவாரி பழைய பாடத்திட்டம்) பரீட்சை (2020)**

பொருளியல் III
**ECG 3** பிரயோகப் பொருளியல்

எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை தருக.
இவ்வினாத்தாளில் உள்ள மொத்த வினாக்களின் எண்ணிக்கை 10
ஒவ்வொரு வினாவுக்கும் ஒதுக்கப்பட்ட புள்ளிகள், அதற்கேற்ப, குறிப்பிடப்பட்டுள்ளன
(நேரம்: மூன்று மணித்தியாலங்கள்)

---

1. (i) 1948 இல் இலங்கை சுதந்திரமடைந்த வேளையில் கொண்டிருந்த ஐந்து (5) 'ஆரம்பநிலை அனுகூலங்களை' விளக்குக. (05 புள்ளிகள்)
   (ii) இலங்கையில் 1977 இற்கு முன்னரான காலப்பகுதியிலான பொருளாதார அபிவிருத்தியின் பிரதான பண்புகளை ஆராய்க. (15 புள்ளிகள்)

2. (i) 1977 இலிருந்து அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட ஐந்து பிரதான பொருளாதாரக் கொள்கைச் சீர்திருத்தங்களைச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)
   (ii) 1977 சீர்திருத்தத்திற்குப் பின்னர் உள்நாட்டு யுத்தம், தென் பகுதிக் கிளர்ச்சி போன்ற உள்நாட்டுப் பிரச்சினைகள் பொருளாதார செயலாற்றத்தினை எவ்வாறு பாதித்துள்ளன? (05 புள்ளிகள்)
   (iii) தலா மெய் உள்நாட்டு உற்பத்தியிலான ஒரு அதிகரிப்பானது பொருளாதாரத்திலுள்ள ஒவ்வொருவரும் முன்னரைவிடவும் சிறந்த நிலைக்குச் செல்வதினைக் குறிக்கின்றதா? ஏன் அல்லது ஏன் இல்லை? (10 புள்ளிகள்)

3. (i) இலங்கையின் வறுமையின் முக்கிய பண்புகளை விபரிக்குக. (08 புள்ளிகள்)
   (ii) வறுமையின் அறியப்பட்ட பிரதான பண்புகளை அடிப்படையாகக் கொண்டு இலங்கையின் வறுமைக் குறைப்புக்கு எடுக்கப்படக்கூடிய பயனுள்ள நடவடிக்கைகளைக் குறிப்பிடுக. (12 புள்ளிகள்)

4. (i) 'வேலை செய்யும் சனத்தொகை', 'ஊழியப்படை பங்குபற்றல் வீதம்', 'வேலையின்மை வீதம்' ஆகிய பதங்கள் இலங்கையில் பயன்படுத்தப்படுவதினை அடிப்படையாகக் கொண்டு இவற்றிற்கு வரைவிலக்கணம் தருக. (06 புள்ளிகள்)
   (ii) கடந்த இரு தசாப்த காலமாக ஆண்கள், பெண்கள் ஆகிய இரு பாலார் தொடர்பாகவும், ஊழியப்படை பங்குபற்றல் வீதத்தினதும் வேலையின்மை வீதத்தினதும் போக்கினை விபரிக்குக. (08 புள்ளிகள்)
   (iii) பெண்கள் ஊழியப்படை பங்குபற்றல் வீதத்தினை அதிகரிக்கச் செய்வதற்குள்ள வரையறைகளை ஆராய்ந்து அதனை அதிகரிப்பதற்கான பரிந்துரைகளைத் தருக. (06 புள்ளிகள்)

5. (i) விவசாயத்தில் அரசாங்கத்தின் ஐந்து முக்கிய தலையீடுகளை குறிப்பிட்டு அத்தலையீடுகள் வெற்றியளித்துள்ளனவா இல்லையா என்பதனைச் சுருக்கமாகக் கூறுக. (12 புள்ளிகள்)
   (ii) பிரச்சிகைள் மற்றும் சவால்களுக்கு முக்கயத்துவம் கொடுத்து விவசாயத் துறையின் செயலாற்றத்தினை மதிப்பிடுக. (08 புள்ளிகள்)

6. (i) கீழ் வரும் தலைப்புக்களன் கீழ் பிரதான கைத்தொழில் உபாயங்களை விபரிக்குக.

(அ) 1977 இற்கு முன்னர் இறக்குமதிப் பதிலீடு

(ஆ) 1977 இற்குப் பின்னர் ஏற்றுமதி அபிவிருத்தி (10 புள்ளிகள்)

(ii) அந்நியச் செலாவணி உழைப்பு, பொருளாதாரத்தின் கைத்தொழில்மயவாக்கம் என்பவற்றின் அடிப்படையில் இறக்குமதிப் பதிலீடு, ஏற்றுமதி அபிவிருத்தி ஆகியவற்றின் விளைவுகளை ஒப்பிடுக. (10 புள்ளிகள்)

7. (i) 1960 களின் ஆரம்பத்திலிருந்து, இலங்கையின் வரி வருமான உள்ளடக்கக் கூறுகள் எவ்வாறு மாற்றமடைந்துள்ளன என்பதனை சுருக்கமாக விபரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) இலங்கையின் பாரிய பாதீட்டுப்பற்றாக் குறையின் பேரினப் பொருளாதார விளைவுகளை ஆராய்க. (10 புள்ளிகள்)

8. (i) இலங்கையின் சென்மதி நிலுவை நடைமுறைக் கணக்கு ஏன் வழமையாகப் பற்றாக்குறையினைக் கொண்டிருக்கின்றது என்பதற்கான காரணங்களை ஆராய்க. (10 புள்ளிகள்)

(ii) இலங்கையின் வர்த்தக நிலுவையினை விளக்குவதில், பின்வரும் காரணிகள் எந்தளவுக்கு முக்கியமானவை? கொள்கை மாற்றங்களாக நீர் எவற்றினைச் சிபார்சு செய்வீர்.? ஏன்? (10 புள்ளிகள்)

(அ) நாணய மாற்று வீத முகாமை

(ஆ) ஏற்றுமதிகளின் பன்முகப்படுத்தல்

9. இலங்கைப் பொருளாதாரத்தின்மீது கொவிட்-19 இன் தாக்க விளைவுகளை நுணுக்கமாகப் பரிசீலனை செய்க. (20 புள்ளிகள்)

10. இலங்கைப் பொருளாதாரம் தொடர்பாக பின்வருவனவற்றுள் எவையேனும் நான்கிற்கு சிறு குறிப்பு எழுதுக: (தலா 05 புள்ளிகள்)

(அ) தலா வருமானம்

(ஆ) இளைஞர் வேலையின்மை

(இ) வறுமை அளவீடுகள்

(ஈ) சனத்தொகைக் கட்டமைப்பு

(உ) அரசாங்கச் செலவின் உள்ளடக்கக்கூறுகள்

(ஊ) சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டம்

(எ) பேண்தகு அபிவிருத்தி

---